# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **EA.No.101/2018** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **ம.சா– 01 (PW– 01 )** |
| **பெயர்** | :- | **செந்தில்** |
| **தேதி** | :- | **11–08–2025** |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி :–**

12.03.2009 – ஆம் தேதியன்று 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளும் வாதிகளும் சேர்ந்து ஆறுமுகம் என்பவருக்கு கிரையம் செய்துக் கொடுத்தோம் என்று சொன்னேன் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு விற்ற சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் வாதிகளை இளவர்களாக காட்டி எழுதினார்களாக என்றால் இல்லை. அப்போது வாதிகள் அனைவரும் உரிமை வயதை அடைந்திருந்தோம்.

வழக்குச் சொத்துக்களில் ஒன்று 412.50 சதுர அடி என்றும் மற்றொன்று 559.25 சதுர அடி என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். 412.50 சதுர அடி இடம் என் தகப்பனார் முருகேசனுக்கு 29.04.1982 -ஆம் தேதியிட்ட வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணமான விற்பனை பத்திரம் மூலம் சொந்தமானது என்றால் சரிதான். ஈஸ்வரி வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 02.03.1982 – ஆம் தேதியிட்ட

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணமான பாகப்பிரிவினை பத்திரத்தில் அந்த 412.50 சதுர அடி இடம் C அட்டவணை சொத்தாக ஈஸ்வரிக்கு ஒதுக்கப் பட்டது என்றால் சரிதான்.

559.25 சதுர அடி இடம் சின்னையா பிள்ளை என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். 12.09.1996-ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் சின்னையா பிள்ளைக்கு A அட்டவணை சொத்தாக அந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சின்னையா பிள்ளை அந்த இடத்தை பொறுத்து என் தகப்பனார் முருகேசனுக்கு 15.10.1999-ஆம் தேதியன்று பகர அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பகர அதிகார பத்திரத்தின் அடிப்படையில் முருகேசன் என் தாயார் சாந்திக்கு 15.11.1999-ஆம் தேதியன்று வாதி தரப்பு 15-ஆம் சான்றாவணம் மூலம் விற்பனை பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

412.50 சதுர அடி இடத்தை பொறுத்து பெரியசாமி என்பவரிடம் 27.03.2000-ஆம் தேதியன்று வாதி தரப்பு 19-ஆம் சான்றாவணம் மூலம் விற்பனைக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுக்கும் முருகேசனுக்கு அந்த சொத்து சுயசம்பாத்திய சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் பின்னிட்டு இரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு 01.09.2006-ஆம் தேதியன்று 03-ஆம் பிரதிவாதி செல்விக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சொத்து மொத்தம் 8,50,000/- உரூபாய்க்கு விலை நிருணயம் செய்யப்பட்டு 8,10,000/- உரூபாயை என் பெற்றோரான 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் 03-ஆம் பிரதிவாதி செல்வியிடமிருந்து முன்பணமாக பெற்றுக்கொண்டனர் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 01.09.2006-ஆம் தேதியன்று நானும் என் பெற்றோரும் ஒரே குடும்பமாகதான் இருந்தோம் என்றால் சரிதான்.

ஒப்பந்தபடி 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகள் நடந்துகொள்ளாததால் 03-ஆம் பிரதிவாதி செல்வி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி முதலேற்பு வழக்கு எண் 58/2007 என்ற வழக்கை சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் நான் வழக்கு போட்ட சமயத்தில்தான் அந்த விவரம் எனக்கு தெரியவந்தது. அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நான் இந்த வழக்கில் அரசு தரப்பு 05-ஆம், 06-ஆம் சான்றாவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்பும் தீர்ப்பாணையும் முழுவிசாரணைக்குபின் வழங்கப்பட்டது என்றால் சரிதான். முன்பணம் போக மீதி விலை பணம் 40,000/- உரூபாயை அந்த வழக்கின் வாதி செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எனக்கு தெரியவில்லை. 40,000/- உரூபாயை அந்த வழக்கின் வாதி நீதிமன்றத்தில் செலுத்திவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் கடனுக்குதான் பணம் வாங்கினோம் என்று என் பெற்றோர் முன்வைத்த எதிர்வாதத்தை நீதிமன்றம் நிராகரித்துள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்சொன்ன தீர்ப்பாணையை எதிர்த்து என் பெற்றோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 986/2009-ஐ தாக்கல் செய்திருந்தனர் என்றால் அது எனக்கு நேரடியாக தெரியாது. இந்த

வழக்கிற்குபின் தெரிந்துகொண்டேன். அந்த மேற்முறையீடு 13.01.2017-ஆம் தேதியன்று தள்ளுப்படி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு எதிர்வழக்குரையை பார்த்து தெரியும். மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்க பட்ட தீர்ப்பை எதிர்த்து என் பெற்றோர் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் SLP 18280/2017, 10285/2017 ஆகியவற்றை தாக்கல் செய்தனர் என்றால் பின்னிட்டு தெரிந்துகொண்டேன். 18280/2017 ஆனது 01.12.2017-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் 10285/2017 ஆனது 11.08.2017-ஆம் தேதியன்று என் தகப்பனாரால் திரும்ப பெறப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு நீதிமன்றம் மூலம் 03-ஆம் பிரதிவாதி செல்வி 20.10.2017-ஆம் தேதியன்று கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் சுவாதீனம் கோரி நிறைவேற்று மனு எண் 145/2018 என்ற மனுவை 03-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

என் தகப்பனார் முருகேசன் மாட்டுவண்டி சக்கரம் பழுது நீக்கும் பட்டறை வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பட்டறை தற்போது என்னால் நடத்தப்படுகிறது. வழக்கு சொத்தின் மேற்பகுதியை யாருக்கு வாடகைக்கு விட்டேன் என்று குறிப்பாக சொல்ல முடியாது. வாடகையை நான்தான் வாங்கினேன். வாடகை எவ்வளவு முன்பணம் எவ்வளவு என்று வழக்குரையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

பூர்வீக சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்று நான் குறிப்பாக வழக்குரையில் எதுவும் சொல்லவில்லை என்றும் அதற்கான சான்றுகளை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் சகோதரிகள் வளர்மதிக்கு 2001-ஆம் ஆண்டும் ஹேமலதாவிற்கு 2009-

ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. இருவருக்கும் சீர்வரிசைகள் செய்தோம் என்றால் வளர்மதிக்கு குறைவாகவும் ஹேமலதாவிற்கு தேவையான அளவும் செய்தோம்.

வழக்கு சொத்தில் சிமிட்டி காரை வீடு உள்ளது. தரைத்தளமும் மேல்தளமும் உள்ளது. அந்த கட்டம் 1999 -2000 ஆண்டு கட்டப்பட்டது. எனக்கு தற்போது 41 வயது. நான் தற்போது உணவகமும் வைத்துள்ளேன். 2018-ஆம் ஆண்டுமுதல் வைத்துள்ளேன். கட்டம் கட்டியதற்கான செலவினங்களை காட்டும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அடைமான பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன்.

என் பெற்றோர் முதலேற்பு வழக்கு எண் 58/2007 வழக்கில் உச்ச நீதிமன்றம்வரை சென்றும் தோல்வியுற்றபின் எங்களை தூண்டிவிட்டு இந்த வழக்கையும் நிறைவேற்று மனுவில் இடைமனுவையும் தாக்கல் செய்து காலதாமதம் செய்கின்றனர் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.